மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சாதாரண பேருந்தாக இருந்தால் நிச்சயமாக அங்கேயும் நின்றுதான் போகும். விரைவுப் பேருந்தாக இருப்பதால் அங்கே நின்றுபோவது சரியல்ல என்று கருதுகிறார்கள்.

*327 வினா—**திரு. நா. வெ. குருசாமி :** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையில் இருந்து கூடலூர் செல்லும் பாண்டியன் போக்கு வரத்து துரித வண்டி ஆண்டிப்பட்டியில் நின்று செல்லச் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. நா. வெ. குருசாமி : தலைவரவர்களே, மதுரையிலிருந்து கூடலூர் செல்லும் விரைவுப் பேருந்து ஆண்டிப்பட்டியில் நிற்பது இல்லை. ஆகவே, எங்களைப் போன்றவர்கள் ஆண்டிப்பட்டியில் இறங்க முடியாமல் போகிறது. அங்கே டிக்கட்டுகள் போட்டுக் கொடுக்கப்படுவதில்லை என்றாலும், விரைவுப் பேருந்துகள் நின்று போவதற்காவது வசதி செய்து கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அரசு பேருந்துத் துறையின் சார்பில் மதுரையிலிருந்து கூடலூருக்கு விரைவுப் பேருந்து விடப்படவில்லை. அந்த பஸ்கள் பாண்டியன் போக்கு வரத்துக் கழகத்தைச் சேர்ந்தவை. அதனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை பாண்டியன் போக்குவரத்துக் கழகத் திற்கு அனுப்பி வைக்கப்படும்.

ஆரம்பாக்கத்திலுள்ள சோப்புத் தொழிற்சாலை

*328 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், ஆரம்பாக்கம் கிராமத்தில் நடைபெறும் கதர் கிராமத் தொழில் வாரிய சோப்புத் தொழிற் சாலையை மேலும் விரிவுபடுத்தி வேலைவாய்ப்பும் வருவாயும் பெருக்கும் திட்டம் உண்டா ?